to know whether Government would introduce, through 'Aavin', fast food based on cheese products like sandwiches, cheese burgers, cheese pizzas, etc.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஃபாஸ்ட் ஃபுட் போன்ற பொருள்களை தயாரிப்பதற்கு தற்சமயம் ஆவினில் எந்தத் திட்டமும் இல்லை. அதைத் தயாரிப்பதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோன்று பாலகங்களில் விற்பனை செய்வதற்கு வாய்ப்பு இல்லை. மாண்புமிகு உறுப்பினரது கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு வாய்ப்பு இருப்பின் ஏதேனும் குறிப்பிட்ட பாலகங்களில் மட்டும் விற்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *492*, திருமதி ரமணி நல்லதம்பி, இருக்கையில் இல்லை.

வினா எண் *493*, டாக்டர் எம்.பி. சேகர், மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

493—

மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு உதவிகள்.

21770—**டாக்டர் எம்.பி.சேகர்:**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு தமிழக அரசு சிறப்பு உதவிகள் அளிக்கின்றதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பல்வேறு நடவடிக்கைகள் உள்ளன.

டாக்டர் எம்.பி. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொற்கால ஆட்சி நடத்தும் மாண்புமிகு முதல்வர், மாண்புமிகு

1995 ஏப்ரல் 28]

மோஸ்ட் சூப்பர் முதல்வர், மோஸ்ட் சூப்பர் ஃபாஸ்ட் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எள் என்பதற்குள் எண்ணெயுடன் வந்து நிற்கும், மிகவும் சுறுசுறுப்பாகவும், வேகமாகவும், சிறப்பாகவும், விவேகத்துடனும் திறமையுடனும் செயல்படும் மாண்புமிகு சமூகநலத்துறை மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் அவர்களுடைய நல்ல பதிலுக்காக நான் நன்றி தெரிவித்துக் கொண்டு, இத்திட்டத்தில் இதுவரையில் எவ்வளவு தொகை செலவிடப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டில் 6.23 லட்சங்களும், 1993-94 ஆம் ஆண்டில் 6.72 லட்சங்களும், 1994-95-ஆம் ஆண்டில் 7.77 லட்சங்களும், 1995-96-ஆம் ஆண்டில் 8 லட்சங்களும் வழங்கி மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டு இதை நடைமுறைப்படுத்தி வந்துகொண்டிருக்கிறார்கள். ஆண்டுக்கு ஆண்டு மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கருணையோடு இந்தத் தொகையை உயர்த்தி வந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எம்.பி. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரி பரிதாபத்திற்குரிய குழந்தை நோயாளிகளுக்குப் பயன்படும் வகையில், அதிக பரப்பளவு கொண்டுள்ள கிண்டி ராஜ்பவனில் உபரியாக உள்ள, உபயோகத்தில் இல்லாத இடத்தில் அல்லது அதற்குப் பக்கத்தில் மூளை வளர்ச்சி குன்றியவர்களுக்கும், உடல் ஊனமுற்றவர்களுக்கும், முதியோர்களுக்கும் உதவும் வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நேற்று சபையிலே அறிவித்தபடி 25 காப்பகங்களிலே ஒன்றையோ அல்லது ஒரு மருத்துவமனையையோ அங்கே அமைத்துத்தர ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: பேரவைத் தலைவர் அவர்களே, கிண்டி ராஜ்பவனிற்குப் பக்கத்தில் அதிகமான இடம் உபயோகம் இல்லாமல் இருப்பதாகவும், அந்த இடங்களிலே மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு காப்பகம் அமைக்க இடம் ஒதுக்கப்படுமா என்று உறுப்பினர் கேட்டிருக்கிறார். அங்கே இடம் ஒதுக்கினால்

மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகள் இன்னும் மூளை வளர்ச்சி இல்லாமல் போய்விடும், என்ற காரணத்தினாலே அந்த இடத்தைத் தேர்வு செய்ய இயலாது. வேறு இடத்திலே இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிற இடம் மிகப் பெரிய பரப்பு உள்ள இடமாக இருப்பதால், அதுவே போதுமானது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *494*, திரு. கு. சிவசுப்பிரமணியன், மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்.

494—

குறிஞ்சிப்பாடியில் நெசவாளர் பயிற்சி நிலையம் அமைத்தல்

26106*—திரு. கு. சிவசுப்பிரமணியன்:**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கைத்தறி நெசவாளர்களுக்கான பயிற்சி நிலையம் ஒன்றை தென்னாற்காடு—வள்ளலார் மாவட்டம், குறிஞ்சிப்பாடியில் துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திரு. கு. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடலூர் என்றால், 'எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க' என்ற வள்ளலார் நினைவுக்கு வருவார். நெய்வேலி என்றால், பழுப்பு நிலக்கரி நினைவுக்கு வரும். சேடப்பட்டி என்றால் இன்றைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நினைவுக்கு வருகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப் போலவே தமிழ்நாடு என்றால், தமிழ் என்றால், நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான் எல்லோர் நினைவுக்கும் வரும். அந்த அடிப்படையில், குறிஞ்சிப்பாடி என்றால், நெசவுத்தொழில்தான் எல்லோரது நினைவுக்கும் வரும். அப்படிப்பட்ட என்னுடைய பகுதியில், ஒரு புராஜக்ட் மற்றும் 8 கூட்டுறவுச் சங்கங்களில் பல்லாயிரக்கணக்கான நெசவாளர்கள் இந்தத் தொழிலைச் செய்து